# நெற் பயிருக்கு சுற்றாடல்நேய உரங்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சகல தரப்புகளுக்குமான வழிகாட்டல்

## சிறுபோகம் - 2022

# 2022-சிறுபாகத்தில் நெற் பயிருக்கு உரங்களைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சகல தரப்புகளுக்குமான வழிகாட்டல்

சௌபாக்கிய தூரநோக்கு தேசிய கொள்கை வேலைச்சட்டகத்திற்கு இணங்க இந்த நாட்டின் விவசாயத்தை நிலையான சுற்றாடல்நேயமான ஒரு முறைமையாக ஊக்குவிப்பதும் மற்றும் ஒட்டுமொத்த விவசாயத்திற்கு இயற்கை உள்ளீடுகளை மாத்திரம் இடும் வகையில் முறையாக படிப்படியாக நடவடிக்கையை எடுப்பதும் மிக அவசியமாகும்.

ஆகையால், அதன் நிமித்தம் திட்டமிடப்பட்டுள்ள பயணத்தின் ஒரு கட்டமாக, 2022 சிறுபோகத்தில் நெல்லை முழுமையாக சுற்றாடல்நேய உரங்களை இட்டு பயிரிடுவதற்கான அரசாங்கத்தின் உரங்கள் பகிர்ந்தளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவது பற்றிய இந்த வழிகாட்டல் ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த இந்த வழிகாட்டல் ஆவணத்தில் அரசாங்கத்தின் உரக் கொள்கை, உரங்களுக்கு விண்ணப்பித்தல், உரங்களைப் பகிர்ந்தளித்தல், உரங்களை உரிய முறையில் பாவித்தல், கண்காணித்தல், முன்னேற்றம் பற்றி அறிக்கையிடுதல், மீளாய்வு செய்தல், பெறுபேறுகளை மதிப்பிடுதல் முதலியன போன்ற விடய அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாட்டின் விவசாயத்துடன் சம்பந்தப்படுகின்ற இந்தத் தேசிய கரும பணியை இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறைவேற்றும் முகமாக தேவையான நடவடிக்கைககளை வினைத் திறனாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வது இந்தக் கரும பணியுடன் சம்பந்தப்படும் சகல தரப்புகளினதும் பொறுப்பு என்பதை நான் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இந்த வழிகாட்டல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட முறையியல்கள், அறிவுரைகள், வரையறைகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றை உரிய முறையில் ஆராய்ந்து உர நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தை அந்தந்தப் பயிர்ச் செய்கை காலத்தினுள் வெற்றிகரமாக முன்னெடுக்கும் பொருட்டு தேவையான அறிவை அனைத்து ஊழியர்களுக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். இந்த வழிகாட்டல் ஆவணத்தில் 'உரங்கள்' என்பது சுற்றாடல்நேய உரங்கள் எனப் பொருள்படும்.

குறித்த இந்த வழிகாட்டல் ஆவணம் கமத்தொழில் விடயத்திற்கு பொறுப்புடைய அமைச்சின் செயலாளரது இணக்கத்துடன் வெளியிடப்படுகின்றது.

**எம்.என். ரணசிங்க**
செயலாளர்